# ஈரோட்டில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடனுதவி - பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

















பெண்களின் முன்னேற்றத்திற்கு பொருளாதார சுதந்திரமே தொடக்கப்புள்ளி என்பதை உணர்ந்து மகளிர் முன்னேற்றத்துக்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடெங்கும் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2,504 கோடி அளவுக்கு வங்கி கடன் இணைப்புகளை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக, தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மண்ணில் 2,337 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 20,500 மகளிருக்கு ரூ.100.34 கோடி வங்கி கடன் இணைப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். மேலும், மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் தயாரிக்கும் பொருட்களை ஏற்றிச் சென்று விற்பனை செய்திடும் வகையில், ரூ.3.20 கோடி மதிப்பில் 100 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்கப்படுவதன் அடையாளமாக, 6 மின் வாகனங்களை ஈரோட்டைச் சேர்ந்த மகளிருக்கு வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவற்றின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி பெண்களின் சுயசார்பு பொருளாதாரத்தை உறுதி செய்வதிலும், அவர்களின் வளர்ச்சியிலும் நமது திராவிட மாடல் அரசு என்றென்றும் உறுதியுடன் செயல்படுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உரை நிகழ்த்தினார். அப்போது அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ., வெங்கடாசலம் எம்.எல்.ஏ., உள்பட அரசு அதிகாரிகள், கழக முன்னணியினர் உடனிருந்தனர்.